**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 314/2020**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பாரதிதாசன் | Prosecution | LW–1 as PW –1 |
| Father Name | தமிழரசன் | Defence | |
| Village | கற்கோயில் உடையாம்பள்ளம் | Taluk | சீர்காழி |
| Calling | | Age | 29/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>11.07.2025 எதிரி ஆஜர்</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து சென்னையில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். பிரசாந்த் என்னை அரிவாள் கொண்டு ஓங்கி தலையில் அடித்தார். அப்போது நான் எனது வலது கையை கொண்டு தடுத்தேன். அந்த அருவாள் விட்டு எனது வலது கை சுண்டு விரலிலும், என்னுடைய உச்சந்தலையிலும் விழுந்தது. மேற்படி சம்பவம் நடந்தபோது என்னுடைய தாயார் கோகிலாம்பாள் மற்றும் எனது தங்கை விமலா தேவி ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் அதனை தடுக்க வந்தார்கள், அவர்களுக்கும் அதனால் வெட்டு விழுந்தது. சம்பவ சமயத்தில் எதிரிகள் இருவரும் மது போதையில் இருந்தார்கள். எங்கள் வீட்டிற்குள் வரும்போது அவர்கள் என்னை 'குச்சிகாரி மகனே' என்றெல்லாம் சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டே வந்தார்கள். அது தவிர எதிரிகள் எங்கள் வீட்டில் இருந்த டிவி, சோலார் பேனல், கதவு, ஜன்னல் ஜன்னல், நாற்காலி, ஸ்டெபிலைசர் உள்ளிட்ட பொருட்களை அடித்து உடைத்தார்கள். சம்பவம் நடந்த பிறகு எனது உறவினர்கள் ரவி மற்றும் மதியழகன் ஆகியோர் என்னை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நடந்தது இதுதான். போலீசார் என்னை விசாரித்தனர். நான் சீர்காழி மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த புகார்

வாக்குமூலம் ஆகும். **(மேற்படி ஆவணம் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால், குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**